12. வரவு-செலவுத் திட்டம், 2019-2020, பொது விவாதத்திற்கான பதிலுரை-*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதில்தான். இப்போது குறிப்பு வந்திருக்கிறது. மொத்த* Cards. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொன்முடி, இருங்கள், அவர் சொல்வதற்கு விடமாட்டேன் என்கிறீர்களே.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் முனைவர் க. பொன்முடி எழுந்து நின்றார்.)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *ரொம்ப அவசரப்படுகிறீர்கள் நீங்கள். இதற்கு 2,020 கோடி தேவை.* (குறுக்கீடுகள்) *இப்போது இதைச் சொல்கிறேன் திருத்திக் கொள்ளுங்கள். அண்ணன் இதைத் திருத்திக்கொள்ளுங்கள்.* (குறுக்கீடுகள்) *இதற்கு ரூ.2,020 கோடி தேவை. ஆனால், கொடுத்தது ரூ.2019 கோடி. மீதி* Card-*க்கு பணம் வாங்கவில்லை.* (குறுக்கீடு) *உட்காருங்கள் திரு. ஆஸ்டின்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவ்வளவுதான் உட்காருங்கள்.*

14. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2019), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2019) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

@ 14-2-2019 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.